## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் , திருநெல்வேலி பிரிவு.

## தடகளம், நீச்சல், கால்பந்து ,வாலிபால் ,குத்துச்சண்டைமற்றும் ஜிம்னாஸ்டிக் ஆகிய விளையாட்டுப் போட்டிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் துவக்கி வைக்கிறார்கள்.

### பத்திரிக்கை செய்தி

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், திருநெல்வேலி பிரிவு சார்பில் 2017– 2018 ஆம் ஆண்டுக்கான ஜீலை 2017 மாத மாதாந்திர விளையாட்டுப்போட்டிகள் 13.07.2017 அன்று காலை 09.00 மணி முதல் பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டு அரங்கில் வைத்து நடைபெறவுள்ளது. பள்ளியில் பயிலும் பள்ளி மாணவ, மாணவிகள் மட்டுமே கலந்து கொள்ளலாம். மேற்படி போட்டியில் தடகளம், நீச்சல் , கால்பந்து , வாலிபால், குத்துச் சண்டை, மற்றும் ஜிம்னாஸ்டிக் ஆகிய விளையாட்டுக்கள் மாணவ,மாணவிகளுக்கு தனித்தனியாக நடைபெறுகிறது.

**தடகளம் மற்றும் நீச்சல் போட்டிகள் கீழ்கண்டவாறு நடைபெறும் :–**

- **தடகளம் ( 14,17 மற்றும் 19 வயதிற்குட்ட மாணவ, மாணவியர்களுக்கு தனித்தனியாக )**
  100 மீ , 200 மீ, 400 மீ/ 800 மீ/1500மீ , நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல்,குண்டு எறிதல், 4 x 100 மீ தொடர் ஓட்டம்.
- **நீச்சல் (19 வயதிற்குட்ட மாணவ, மாணவியர்களுக்கு மட்டும்)**
- 50 Mts., 100 Mts., 200 Mts., 400 Mts. Free Style, 50 Mts.Back Stroke, 50 Mts., Breast stroke, 50 Mts.Butterfly stroke and 200 Mts. Individual Medley.
- **குழு விளையாட்டு போட்டிகள் – கால்பந்து மற்றும் வாலிபால்**
  **( 14,17 மற்றும் 19 வயதிற்குட்ட மாணவ, மாணவியர்களுக்கு தனித்தனியாக )**
- **ஜிம்னாஸ்டிக் : ( 14 மற்றும் 17 வயதிற்குட்ட மாணவ, மாணவியர்களுக்கு மட்டும் தனித்தனியாக நடத்தப்படும். )**
  ஆண்கள் : (14வயதிற்குட்பட்டவர்களுக்கு) 1) Floor.ex 2.Vaulting table
  பெண்கள்: (14வயதிற்குட்பட்டவர்களுக்கு) 1) Floor.ex 2. Vaulting table,
  ஆண்கள் : (17 வயதிற்குட்பட்டவர்களுக்கு) 1)Floor.ex 2) Vaulting table 3) Pommel horse 4) Romen Rings 5) Parellelbar
  பெண்கள்: (17வயதிற்குட்பட்டவர்களுக்கு) 1) Floor.ex 2. Vaulting table,
- **குத்துச் சண்டை : ( 14,17 மற்றும் 19 வயதிற்குட்ட மாணவ, மாணவியர்களுக்கு தனித்தனியாக )**
  14வயதிற்குட்பட்டவர்கள்28 kg to 52 kg,
  17 வயதிற்குட்பட்டவர்கள் 44kg to 80 kg
  19 வயதிற்குட்பட்டவர்கள் 48 kg to 81 kg & 49 kg to 81 kg

ஒவ்வொரு விளையாட்டிலும் ஒவ்வொரு பிரிவிலும் ஒரு பள்ளியிலிருந்து ஒரு மாணவ அணியும், ஒரு மாணவியர் அணியும் மட்டுமே கலந்து கொள்ளலாம். தனிநபர் போட்டியில் ஒருவர் ஒரு போட்டியில் மட்டுமே கலந்துக் கொள்ள அனுமதிக்கப்படுவர். போட்டியில் கலந்து கொள்பவர்களுக்கு தினப்படியோ/ பயணப்படியோ வழங்கப்படமாட்டாது. போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் அனைவரும் (முன்பதிவுசெய்தவர்கள் மற்றும் செய்யாதவர்கள்) தலைமையாசிரிடமிருந்து பெறப்பட்ட பள்ளியில் படிப்பதற்கான சான்றிதழுடன் (Bonafide & Age Certificate) 13.7.2017அன்று காலை 08.30 மணிக்குள் பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டு அரங்கில் ஆஜராக வேண்டும். முதல் இரண்டு இடங்களில் வெற்றி பெறும் வீரர் /வீராங்கனைகளுக்கு பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும். திருநெல்வேலி மாவட்டத்தை சார்ந்த பள்ளிகளில் பயிலும் வீரர் / வீராங்கனைகள் மட்டுமே கலந்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு 0462-2572632 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

மேற்கண்ட தகவலை திருநெல்வேலி, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் **முனைவர். க. சேவியர் ஜோதி சற்குணம்** அவர்கள் தெரிவித்தார்கள்.

ஒம்/-
மாவட்ட விளையாட்டு மற்றும்
இளைஞர் நலன் அலுவலர்
திருநெல்வேலி.